Registered as a Newspaper in Ceylon

★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசீய தினசரி National Tamil Daily

மலர் 7 (1-10-65) இதழ் 231

விசுவாவசு புரட்டாதி 15 ஐ: ஆகிர் பிறை 5 வெள்ளிக்கிழமை

நீடித்த பாவனைக்கு

சொனென்ஷீன் சொனென்ஷீன்



பற்றறிகளையே உபயோகியுங்கள்

வடமாகாண ஏகவினியோகஸ்தர்கள்:-

துரை அன் கோ

23/3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## கோரமில்லா கோரம்!

கொழும்பு, வியாழன்
ஜனப்பிரதிநிதிகள் சபை இன்று காலை கூடியபொழுது 12 அங்கத்தவர்கள் தான் சமுகமளித்திருந்தனர். எனவே 'கோரம்' இல்லாத காரணத்தால் சபைக்கூட்டம் அடுத்த செவ்வாய்க்கிழமை பிற்பகல்வரை ஒத்திவைக்கப்பட்டது.

## தபால் தந்தி ஊழியர் வேலை நிறுத்தம் முடிந்தது

பம்பலப்பிட்டி, வியாழன்

சென்ற மூன்று தினங்களாக நடைபெற்று வந்த கொழும்பு தபால், தந்தி ஊழியர்களின் வேலை நிறுத்தம் இன்று கைவிடப்பட்டது. கொழும்பு பெரிய தபால் கந்தோர் மெயில் அறையைச் சேர்ந்த நூறு கனிஷ்ட ஊழியர்கள் வேறொரு பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டதை ஆட்சேபித்து நடைபெற்ற இவ்வேலை நிறுத்தத்தில் மூவாயிரம் தபால், தந்தி ஊழியர்கள் கலந்துகொண்டனர். இன்று காலை 6 மணிக்குள் வேலைக்குத் திரும்பாவிடில் வேலை நிறுத்தம் செய்யும் ஊழியர்கள் எல்லோரும் வேலை நீக்கம் செய்யப்படுவார்களென இறுதி எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

# "அவசியம் ஏற்படின் அணுகுண்டு செய்வோம்"

## நியூயோர்க்கில் இந்திய மந்திரி சுவர்ண்சிங் அறிவிப்பு

### பாகிஸ்தான் மீது ஐ. நா. வில் காஷ்மீர் மந்திரி கண்டனம்

நியூயோர்க், செப். 30

அணுகுண்டுகளை உற்பத்திசெய்வது இப்போது பாரதத்தின் கொள்கை அல்லவென்றும், ஆனல் அவசியம் ஏற்பட்டால் அணுசக்தி பற்றிய தனது கொள்கையை பாரதம் மாற்றிக்கொள்ளும் என்றும் வெளிநாட்டுமந்திரி சுவர்ண்சிங் இங்கு அமெரிக்க நிருபர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போது கூறினர்.

இன்று ஐ. நா. பொதுச் சபையில் பேசிய இந்திய தூதுகோஷ்டி அங்கத்தவர் திரு. சையத் மிர்காசிம், இந்தோ—பாகிஸ்தான் பூசலுக்கு காஷ்மீர் காரணமல்லவென்றும், இந்தியாவின் வாழ்க்கை முறையைக் குலைக்கவேண்டும் என்ற பாக். நோக்கமே அதற்குக் காரணம் என்றும் கூறினர்.

''திரு. பூட்டோ பொய்யும், புனைசுருட்டும் தீட்டுவதில் மகிழ்ச்சி அடைகிறார்'' என்றார் காசிம்.

காலனி ஆதிக்கத்தை எதிர்த்து பாகிஸ்தான் பிரதிநிதி பேசியதை அவர் கிண்டல் செய்தார்.

''சுயஸ் பிரச்னை, ஏமன் பிரச்னை போன்றவற்றில் பாகிஸ்தான் காலனிநாடுகளுக்கு ஆதரவளித்தது. போர்த்துக்கலின் காலனி ஆதிக்கத்தை ஆதரித்தது. தென்னபிரிக்காவுடன் வர்த்தகம் நடத்திவருகிறது. இந்நிலையில் பாகிஸ்தான் காலனி ஆதிக்கத்தை எதிர்த்துப் பேசுவது கேலிக்கூத்து'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

''காஷ்மீர் விஷயத்தில் சர்வதேச நெருக்குதலுக்கு இந்தியா பணியாது. இந்தியாவின் ஒருபகுதியே காஷ்மீர்'' என்றும் அவர் கூறினர்.

''காஷ்மீர் விஷயத்தில் பாகிஸ்தானுக்கு உண்மையிலேயே அக்கறை இருக்குமானல், அதன் ஒரு பகுதியைச் சீனவிடம் அது ஒப்படைக்காது. பாகிஸ்தான் மட்டுமே இப்போது ஆசியாவில் காலனி ஆதிக்கத்தை ஆதரிக்கும் ஒரே நாடாக விளங்கிவருகிறது'' என்றும் அவர் கூறினர்.

## அல்ஜியர்ஸ் மகாநாடு: சீன விரும்பவில்லை!

நியூயோர்க், செப். 30

அல்ஜீரியாவில் 2-வது ஆசிய-ஆபிரிக்க மகாநாடு நடைபெறுவதைச் சீன இப்போது விரும்பவில்லை என இங்குள்ள ஐ. நா. அவதானிகள் கருதுகிறார்கள். சமீபத்திலே இந்தோ - பாக். யுத்தத்தின்போது சீன நடந்துகொண்ட முறையினல் சீனவின் கௌரவம் வீழ்ச்சியடைந்ததே இதற்குக் காரணம் என்றும் அல்ஜியர்ஸ் மகாநாட்டிலிருந்து நழுவிச் செல்ல சீன புது உத்திகளைத் தேடிவருவதாயும் அவர்கள் கருதுகிறார்கள்.

புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி ஜி.சி.ஈ. (சாதாரணம்) கலைவகுப்பு மாணவர்களால் இன்று பிற்பகல் 3 மணியளவில் கலைமகள் விழா நடாத்தப்படவிருக்கிறது. விழாவில் நல்லூர் தமிழ் மணிக் குழுவினரின் '[illegible]' என்னும் பொருள்பற்றிய வில்லுப் பாட்டு இடம்பெறும்.

## 'வேற்றுமை, வேறுபாடு இப்போது நிலவவில்லை'

### அரசியலின் அர்த்தத்தை உணர்ந்துவிட்டேன் என்கிறார் பிரதமர்

பம்பலப்பிட்டி, வியா.

'முன்னர் நிலவிவந்த கருத்துவேறுபாடு, முரண்பாடு, வேற்றுமை போன்றவையெல்லாம் இப்போதில்லை. அரசியல்என்பதற்கான உள் அர்த்தத்தை நான் இறுதியாக அறிந்துள்ளேன் என உணர்கிறேன்' என பிரதமர் திரு. டட்லி சேனநாயகா கொழும்பு சென். தோமஸ் கல்லூரி பழைய மாணவர் சங்கம் அவருக்களித்தஇரவு விருந்தில் கலந்து உரையாற்றுகையில் கூறினர்.

பிரதமர் மேலும் பெசுகையில் கூறியதாவது:

இன, மத, பேதமற்றஒரு அரசாங்கத்தின் தலைமைப் பதவியில் இருப்பதை முன்னிட்டு நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இது எனக்கு சென். தோமஸ் கல்லூரியை நினைவூட்டுகிறது.

அரசாங்கத்துக்குப் பல பொறுப்புக்கள் இருக்கின்றது. பல சமயத்தைச்சேர்ந்தவர்களும் ஒருமனதாக உழைப்பதுஇவ்வித பொறுப்புக்களை இலகுவாகக் கருதுவதற்கு ஊக்கம் அளிப்பதாக இருக்கிறது'.

வண. கெனன் ஆர். எஸ். டி. சேகரம் பேசுகையில் கூறியதாவது:

மக்களுக்காகவே அரசாங்கம் என்பதில் திரு. டட்லி சேனநாயகா நம்பிக்கை வைத்துள்ளார். மக்களுக்கு பேச்சு சுதந்திரமும் வழிபாட்டுச் சுதந்திரமும் இருக்கவேண்டுமெனவும் சுயமரியாதையோடு வாழவேண்டுமெனவும் விரும்புபவர் திரு. டட்லி சேனநாயகா.

திரு. டட்லி சேனநாயகாவின் தந்தை சகல மக்களிடையேயும் சமஉரிமையும் சமவாய்ப்பும் இருக்கவேண்டும் என்பதற்காக உழைத்தவர். இதனையே திரு. டட்லியும் பின்பற்றி வருகிறார். எமதுகல்லூரியும் இதனையே கருத்தில் கொண்டு உழைத்து வருகிறது. நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டுள்ள சகலரும் இதற்காகவே உழைத்து வருவார்கள்.

வடபகுதி அசைஸ் விசாரணை

## வவுனியா கொலை வழக்கில் எதிரிக்கு 4 வருடச் சிறை

யாழ்ப்பாணம், வெள்ளி

வவுனியா கொலைவழக்கில் 24 வயதுள்ள எதிரி இராமசாமி சின்னக்கண்டு என்பவருக்கு நான்கு வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

வடபகுதி அசைஸ்நீதிமன்றத்தில் இவ்வழக்கு நீதியரசர் டாக்டர் ஏச். டபிள்யு. தம்பையா கியூ. ஸி. முன்னிலையில் கடந்த இரு தினங்களாக விசாரணை செய்யப்பட்டது.

நேற்றுக்காலை நீதிமன்றம் கூடியபொழுது கொலைக் குற்றமாகாத கைமோசக் கொலைக்குற்றத்தில் குற்றவாளியென எதிரி ஒப்புக்கொண்டார்.

இவ்வழக்கில் 1964ம் ஆண்டு மார்ச் மாதம் 13ந் தேதி இரவு வவுனியாவில் இராமசாமி சின்னக்கண்டு என்பவர் ஹெரத்முடியான்சிகே பண்டா என்பவரைப் பொல்லால் அடித்துக் கொலைசெய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் அட்வகேட் திரு. சி. நாகராசா, திருவாளர்கள் பி.ரி.ஜி. பிரிட்டோ, கே. ஞானச்சந்திரன் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானர். எதிரிக்காக அரசாங்கத்தால் திரு. எஸ். பாலக்குமார் நியமிக்கப்பட்டிருந்தார்.

## தனியாக இருந்த மூதாட்டி நள்ளிரவில் படுகொலை

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண நகரின் மத்தியிலுள்ள பிரதான வீதியில் உள்ள ஒரு வீட்டில் நேற்று முன்தினம் நள்ளிரவு படுகொலையும் துணிகரத் திருட்டும் நடந்திருப்பதாகவும் படுகொலைக்குப் பலியானவர் சுமார் எழுபது வயதுடைய ஒரு வயோதிப மாது என்றும் அறியப்படுகிறது.

சம்பவம் நடைபெற்றபோது கொலையுண்டவர் தனியாக இருந்ததாகவும், திருட்டுப் போன பொருள்கள் பற்றி இன்னும் மதிப்பிடப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திலிருந்து கால் மைல் தூரத்திலுள்ள மெயின் வீதியிலுள்ள வீட்டிலேயே தனிமையில் இருந்த அனி என்று அழைக்கப்படும் அந்த வயோதிப மாது கொலை செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணப் பொலிசார் இதுபற்றி புலன் விசாரணை செய்து வருகிறார்கள். இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை இதுசம்பந்தமாக எவரும் கைது செய்யப்படவில்லை.

அந்த வயோதிப மாது கழுத்து நெரிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டிருக்கிறார். கைகளிரண்டும் கயிற்றினல் கட்டப்பட்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிமொழி

எப்படிக் குழந்தைக்கு வேண்டியதைத் தாய் தருவாளோ அப்படிக் கருணையுள்ள பராசக்தி இந்த உலகில் வித்தை, பணம் முதலியன அடையச்செய்து பின்பு தானாகப் பழுத்து பரமானந்தத்தைப் பெறும்படி அனுக்கிரகம்செய்வாள்.

—ஸ்ரீகாமகோடி சுவாமிகள்


# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு புரட்டாதி 15-உ (1-10-65)


## நமது அருமைக் குழந்தைகள்

சர்வதேச குழந்தைகள் வாரம் இன்று ஆரம்பமாகிறது. இலங்கையிலும் பல இடங்களில் கொண்டாட ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இவ்வாரத்தையொட்டி, பொதுக் கூட்டங்கள், குழந்தைகளின் கதம்ப நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இந்நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் சிறுவர் சிறுமியருக்கும் அவர்களின் ஆடல்பாடல்களைக் கண்டு களிக்கும் பெரியவர்களுக்கும் உற்சாகத்தையும், மகிழ்ச்சியையும் எழுத்தில் அடக்கமுடியாது.

ஆனால் நாட்டிலுள்ள சிறுவர், சிறுமியர், குழந்தைகள் எல்லாம் மகிழ்ச்சியுடன் இருக்கின்றனவா? எத்தனை குழந்தைகள் நல்ல உணவின்றி, போஷாக்கு இன்மையால் நலிந்துகிடக்கின்றன? எத்தனை குழந்தைகள் உடுக்க உடையின்றி 'கோவணாண்டிகளாக'க் காட்சியளிக்கின்றன? இலவசக் கல்வித்திட்டம் இங்குதான் ஆசியாவிலேயே முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்டதெனினும் பாடசாலைப் படிகளையே மிதிக்க வசதியற்ற சிறுவர் சிறுமியர் எத்தனை பேர்? பரட்டைத்தலையும், ஒட்டி உலர்ந்த உடலும், குழி விழுந்த கண்களுமாக வீதிகளில் ''அம்மா தாயே'' எனக் குரல் கொடுக்கும் சிறுவர் சிறுமியரும் நமது நகரங்களில் காட்சியளித்துக் கொண்டுதான் இருக்கின்றனர்.

சர்வதேச சிறுவர் வாரத்தை ஆண்டுக்கு ஒருதடவை மேடைப்பிரசங்கங்களுடனும், கதம்ப நிகழ்ச்சிகளுடனும் கொண்டாடிவிட்டால் போதாது. சமதர்மம், ஜனநாயக சமதர்மம் என்றெல்லாம் பேசப்படும் இந்நாளில் ஒருசில சிறுவர் சிறுமியர் வாய்ப்பும், வசதியுடனும் மகிழ்ச்சியுடனும் வாழமற்றொருபகுதிசிறுவர்சிறுமியர் ஒருவேளைக்கஞ்சிக்கே வழியில்லாமல் வாழ்வது நியாயமாகாது. இன்றைய சிறுவர் சிறுமியர்தான் நாட்டின் நாளைய நற்பிரஜைகளும் தலைவர்களுமாவார்கள். இச்சிறுவர் சிறுமியர் ஒழுங்கான வாழ்க்கை வாழ வழி செய்யாவிட்டால் வருங்காலத்தில் நாட்டில் நற்பிரஜைகள் இருக்கமாட்டார்கள்.

உணவு, உடை, கல்வி ஆகியவைகளில் நாட்டிலுள்ள சிறுவர் சிறுமியர் அனைவருக்கும் சமவாய்ப்புக் கிடைக்க வேண்டும். இதற்கு அரசாங்கமும் வசதி படைத்தவர்களும் பொது ஸ்தாபனங்களும் உதவியும் ஊக்கமும் அளிக்க வேண்டும்.

சிறுவர் சிறுமியர் நல்லாரோக்கியத்துடனிருந்தால்தான் நாட்டின் வருங்காலம் முன்னேற்றமுடையதாகவும் பாதுகாப்பானதாகவுமிருக்கும். இன்றோ நமது நாட்டில் 'ஏற்புவலி' இளம்பிள்ளைவாதம் முதலிய கொடிய நோய்கள் அதிகம் பரவி இளம்உயிர்களைப் பலிவாங்குகின்றன. இந்நோய்களைத் தடுக்கவும் சிறுவர் சிறுமியர் சீரான வாழ்க்கை வாழவும் வழிவகைகள் தேடாமல் வருடமொருமுறை விழாக் கொண்டாடுவதால் சிறுவர் வாழ்வு மலர்ந்துவிடாது. காப்பாற்ற வழியின்றித் தங்கள் அருமைக் குழந்தைகளை சில எளியபெற்றோர்கள் சின்னவயதிலேயே பிற வீடுகளில் வேலைக்கு விடவேண்டிய துர்ப்பாக்கியமுள்ளது. அவர்கள் அடிமைகளாக அவதிப்படும் கண்ணராவிகளுக்கும் ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

## துணிகளில் கள்ளத்தனம்

தீபாவளிப் பண்டிகை நெருங்க நெருங்க நாட்டில் துணிகளுக்குத் தட்டுப்பாடும் விலை உயர்வும் ஏற்பட்டுள்ளதாதச் செய்திகள் கூறுகின்றன. இந்திய—பாகிஸ்தான் சண்டையைசாக்காக வைத்துக் கொண்டு வியாபாரிகள் பதுக்கல், கொள்ளைலாபம் முதலியவற்றில் ஈடுபட்டுள்ளதாகப்பொதுவாகப் புகார் கூறப்படுகிறது. இதில் உண்மையில்லாமலில்லை.

தனிப்பட்ட வியாபாரிகள் ஒருபுறமிருக்கட்டும். பொது மக்களுக்கு நியாயமானவிலையிலும் பொருள்கள் தட்டுப்பாடில்லாமலும் கிடைக்க வேண்டுமென்பதையே நோக்கமாகக்கொண்டு ஸ்தாபிக்கப்பட்ட கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையங்களில்கூட பொதுமக்கள் நியாயமான, நேர்மையான முறையில் உடுபிடவைகளும் மற்றும் துணி வகைகளும் பெற முடியாமலுள்ளது. கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனங்களில் ஊழலும் மோசடிகளும் மலிந்திருப்பதாகப் புகார் கூறப்படுவது இதுதான் முதல்தடவையல்ல. என்றாலும் இன்னும் இவை சீராகவில்லையென்பதுதான் வேதனை.

கூ.மொ.வி. ஸ்தாபனங்களில் மோசடியும் ஊழல்களும் நிலவுவதற்குப் பொதுமக்களும் உடந்தையாக இருக்கின்றனர் என்பதும் உண்மையே. தனிப்பட்ட வியாபாரிகள் கொள்ளைலாபம், பதுக்கல் முதலிய தீய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குப் பொதுமக்களே பெரும்பாலும் காரணமாக இருக்கின்றனர். கூ. மொ. வி. ஸ்தாபனங்களிலிருந்து மலிவான, நல்ல துணிமணிகள் 'பின்புறவாசல்' வழியாக தனியார் கடைகளுக்குச் சென்று விடுவதாகவும், பொது மக்களிடமிருந்து வியாபாரிகள் கூப்பன் துண்டுகளை விலைக்கு வாங்கி, துணிகளைமொத்தமாக வாங்கிச் சென்று அதிக விலையில் விற்பதாகவும் புகார் கூறப்படுகிறது. கூப்பன் துண்டுகளை பொதுமக்கள், என்ன கஷ்டமிருப்பினும் விலைக்கு விற்காமலும், தனிப்பட்ட வியாபாரிகளிடம் அதிகவிலைக்கு துணிமணிகள் வாங்காமலும் விட்டால் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனங்களில் ஊழலும் மோசடியும் ஒழியவும் நாட்டில் கொள்ளை லாபத்துக்கு [illegible] பொதுமக்களின் பூரண ஒத்துழைப்பு இதற்கு மிக அவசியம்.

## பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டு
### "புலவர் புரத்தில்" நடந்தவைபவம்

நவாலி, வியாழன்

''நவாலியூர் பல நூற்றாண்டுகளாகப் புலவர்களை ஈன்று தந்திருக்கின்றது. இந்த நூற்றாண்டிலே தங்கத்தாத்தாவுக்குப் பின்பு, அவர் புதல்வன் வித்தியாரத்தினம் நடராசனையும், பண்டிதரத்தினம் சு. நவரத்தினத்தையும் தந்திருக்கின்றது. ஆகையால் நவாலியைப் 'புலவர் புரம்' என்று வழங்குவது மிகப் பொருத்தமாகும்'' என்று வழக்கறிஞர் திரு ஆர். என். சிவப்பிரகாசம் தமது பாராட்டுரையில் கூறினார்.

நவாலியூர் கிராமமுன்னேற்றச் சங்க ஆதரவில் நவாலி மகாவித்தியாலயத்தில் சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற பாராட்டு விழாவுக்குச் சங்கத் தலைவர் முதலியார் வை. மகேசன் தலைமைதாங்கினார்.

கலைஞரும், எழுத்தாளரும், ஆசிரியரும், பொது மக்களும் மலர்மாலைகளிட்டு இருவரையும் வரவேற்றனர்

வியாகரண சிரோமணி சீதாராம சாஸ்திரிகள் திரு. நடராசனுடைய மேகதூதம், இதோபதேசம் முதலிய மொழிபெயர்ப்பு நூல்களின் சிறப்புக்களை வடமொழி நூல்களுடன் ஒப்பிட்டு விமர்சனம் செய்தார். மொழிபெயர்ப்பு திரு. நடராசனுக்கே உரியதாகிவிட்டது, தமிழ்செய்த பாக்கியம் என்றார்.

சிவநெறிக்காவலர் திரு. த. முத்துசாமிப்பிள்ளை, நவரத்தினத்தின் அறிவாற்றல்களையும், வரலாற்று நூல்களின் சிறப்புகளையும் பாராட்டினார்.

வித்துவான் வேந்தனாரும், முதலியார் செ. சின்னத்தம்பியும், நடராசன் செந்தமிழ்மரபையும், பாரம்பரிய நூல்வழக்கையும் பேணிச் செய்த நூல்கள் எல்லாம் எமக்கமைந்த அழியாச் செல்வங்கள் என்றார். கவிதையும் நாடகமும், இரசஞானமும் நடராசனுக்கே இயல்பிலமைந்தவை என்றும், நடராசன் பன்மொழிக் கலாநிதி என்றும் பாராட்டினர். வேய்ங்குழல்வித்தகர் திரு. வசந்தகுலசிங்கம் இசைவிருந்தளித்தார். இசைக்குரிசில் செல்வத்துரை வாழ்த்துப்பா பாடினார். பதிலுரைகளுடன் கூட்டம் இனிது நிறைவேறிற்று.

## நாட்டிலும் நகரிலும்

சுமார் முப்பது வருடங்களுக்கு முன்பு நமது தமிழ் பள்ளிக்கூடங்களில்படித்துக் கொண்டிருந்த சிறுவர்களுக்கு நவராத்திரியென்றால் பெரிய கொண்டாட்டம். எங்கள் ஊர்ப்பள்ளிக்கூடத்துக்கு ஒரு பிராமணர் தலைமையாசிரியராயிருந்தார். குரு ஸ்தானம் வகிப்பதற்கு ஏற்ற முகவசீகரமும் அறிவும் ஆக்ஞையும் பொருந்தியவர். பெற்றோரும் பிள்ளைகளும் அவரைபொதுவாக 'ஐயர்' என்றே அழைப்போம்.

நவராத்திரி ஆரம்பதினத்தன்று பள்ளிக்கூடத்தில் கும்பம் வைத்து, சரஸ்வதிபடத்துக்கு மாலைசூட்டி, நவதானியம் விதைத்து, மாணவர்கள் தங்கள் புத்தகங்களில் ஒன்றையோ அல்லது ஏடுகளையோ படத்துக்கு முன் வைத்து, ஒன்பது நாளும் தீபம்காட்டி பூஜை செய்வோம். ஒவ்வொரு நாளும் பின்னேரம் பள்ளிக்கூடம் விட்டதும் 'ஐயர்' மாணவ மாணவிகள் எல்லோரையும் அழைத்துக்கொண்டு வீடு வீடாகச் சுற்றுவோம்.

அப்பொழுது பள்ளிக்கூடங்கள் அரசாங்கச்சொத்தாகவில்லை. அரசாங்கத்திடமிருந்துமான்யம்கிடைப்பதுமில்லை. ஊரிலுள்ளவர்களிடம் பணம் சேர்த்துத்தான் பள்ளிக்கூடம் நடந்தது. ஒவ்வொரு வீட்டுக்கும் முன்னால் போய் நின்றுகொண்டு 'ஐயர்' சொல்லிக்கொடுத்த சரஸ்வதி பாடல்களைப் பாடுவோம். 'விந்துநாத மீதிருப்பாள் செந்தமிழ்ச் செல்வி, வெண்கமல மீதிருப்பாள் செந்தமிழ்ச்செல்வி

வீட்டிலிருப்பவர்கள் எங்கள் எல்லோருக்கும் சுண்டல்கடலையும், அவலும், கற்கண்டும் தருவார்கள். பள்ளிக்கூட நிதிக்காக ஐயரிடம் தங்களாலியன்ற பொருளையும் கொடுப்பார்கள். ஐயர் இந்தச் சமயத்தைப் பயன்படுத்தி மாணவர்களின்முன்னேற்றத்தைப்பற்றி பெற்றோரிடம் தெரிவிப்பார். ஐயருக்கு எங்கள் எல்லோருடைய பெயரும் நன்றாய்த் தெரியும். இன்னார் இன்னார் இன்னபாடத்தில் கெட்டிக்காரர், இன்னபாடத்தில்சக்கட்டை என்று விபரமாகக் கூறுவார். மாணவருக்கும் ஆசிரியருக்கும் பெற்றோருக்கும்இடையே மிகவும் அன்யோன்யமாக உறவு இருந்து வந்தது.

சரஸ்வதிபூஜையன்று ஊர் முழுவதையும் பள்ளிக்கூடத்தில் காணலாம். மாணவர்களோடு சேர்ந்து வந்திருப்பவர்களும் சரஸ்வதி தோத்திரங்களைப் பாடுவார்கள். எல்லோருக்கும் பிரசாதம்வழங்கப்படும்.

ஃ ஃ ஃ

இந்தியாவில் நவராத்திரிக்கு அனேகமாக எல்லா வீடுகளிலுமே கும்பம் ஏற்றிக் கொலு வைக்கப்படும். நூற்றுக்கணக்கான அழகான பொம்மைகளை வைத்து அலங்கரிப்பார்கள். லட்சுமி, சரஸ்வதி, விநாயகர், முருகன், கண்ணன் முதலிய தெய்வங்களின் பொம்மைகளும் வேறு பலவிதமான பொம்மைகளும் கொலுவில் காணப்படும். இப்படிக் கொலு வைக்கும் வழக்கம் ஏனோ நம்மூரில் மிகவும் குறைவு. கலைகளுக்கெல்லாம் அதி தேவதையான சரஸ்வதிக்கு அழகுக்கலை சிருஷ்டிகளை சமர்ப்பணம் செய்வது தான் கொலு வைப்பதன் அர்த்தம் போலும்.

சரஸ்வதி பூஜையை ஆயுத பூஜை என்றும் சொல்லுவதுண்டு. கலாசிருஷ்டியில் உபயோகப்படுத்தப்படும் ஆயுதங்களையும் கொலுவில் வைத்துத்தான் வணங்க வேண்டும். கல்வி பயிலுவோர் ஏடு, எழுத்தாணி, புத்தகங்களையும் சங்கீதம் பயிலுவோர் தம்பூரா, வீணை முதலிய சங்கீதக் கருவிகளையும், சிற்பிகள் தங்கள் செதுக்குளிகளையும், கொல்லர், தச்சர், உழவர் முதலியோர் தத்தம் தொழிலுக்கு வேண்டிய ஆயுதங்களையும் கொலுவில் வைத்து பூஜை செய்வதால் வாணி [illegible] கடாட்சம் கிடைக்குமென்பது நம்பிக்கை.

— வழிப்போக்கன்

## ஐயாறன் எழுதுகிறது

ஒரே தடவையில் நீங்கள் எவ்வளவு இடியப்பம் சாப்பிட முடியுமென்று ஓர் அன்பரைக் கேட்டேன். கூடப்போனால் பத்து சாப்பிடலாமென்றார். போட்டிக்காக நன்றாகச் சாப்பிடக் கூடியவர் எவ்வளவு சாப்பிடலாமென்று கேட்டதற்கு, ஐம்பதுவரை சாப்பிடலாமென்றார்.

ஆனால் நமது பிரதமர் டட்லி மாணவராக இருக்கையில் ஒரே தடவையில் 75 இடியப்பம் சாப்பிட்டாராம்! இந்தத் தகவலை அவர் கொழும்பில் ஒரு கூட்டத்தில் தெரிவித்துவிட்டு, இப்போது இரண்டொன்று சாப்பிடுவது கஷ்டமென்றும், தன் வயிற்றின் புகழ் உலகறிந்ததென்றும், பழைய தவறுகளுக்குச் சங்கடப்பட வேண்டியிருப்பதாகவும் சொன்னார்.

வயதாக ஆக உணவு குறைவாகப் போதுமென்பர். அதிகமான உணவைச் சாப்பிடுவதால்தான் நோய்களும் அதிகரிக்கின்றனவாம். உணவுப் பஞ்சம் அதிகரித்துள்ள காலத்தில், குறைந்த உணவு சாப்பிடுபவர்கள், உணவுப் பிரச்னையைத் தீர்க்கவும் உதவுகின்றார்கள். 15 நாட்களுக்கு ஒரு முறையாவது ஒரு நாள் உபவாசம் இருக்கவேண்டுமென்று ஏகாதசி விரதம் ஏற்பட்டது. அப்படிப் பட்டினி கிடப்பதால் வயிற்றுக்குச் சற்றே ஓய்வு கிடைத்து, தேக சுகமும் மேம்படுமென்பது பெரியோர் அனுபவம். ஆனால் இக்காலத்தில் நம்மில் எவ்வளவு பேர் இப்படி ஏகாதசி உபவாசமிருக்கிறோம். ஏகாதசி 'பலகாரம்' என்று சொல்லி, இட்டிலி, தோசை, அடை, இடியப்பம், பிட்டு, வடை, பழம், பால் என்று வயிற்றுக்கு இரட்டிப்பு வேலை கொடுப்பவர்களுமுள்ளனரல்லவா? ஆஸ்பத்திரிகளில் அதிக நெருக்கடி ஏற்படுவதில் என்ன வியப்பு!

ஃ ஃ ஃ

அங்கொடை மனநோய் ஆஸ்பத்திரியிலே பல்லாயிரக்கணக்கானவர்கள் அடைபட்டுக்கிடப்பதாயும் அது ஒரு ''பூலோக நரகமாக'' இருப்பதாயும் ஒரு கட்டுரையில் படித்தேன். உடன் யாழ்ப்பாணத்திலிருந்து அங்கு அனுப்பப்பட்ட ஒருவரைப்பற்றித்தான் நினைப்பு வந்தது. தோட்ட வேலையில் அவர் மிகக் கைதேர்ந்தவர். நல்ல உழைப்பாளி. பாவம் ஏதோ சில சமயம் சித்தப்பிரமை வந்துவிடும். ஒரு நாள் பக்கத்திலிருந்தவர்களுக்குத் தொந்தரவு அளித்ததில், பொலிசுக்குச் சொல்லி அவரைப் பிடித்து, நீதவானின் கட்டளைமீது அங்கொடை 'நரகத்'துக்கு அனுப்பிவிட்டனர்.

அவருக்குத் தமிழ்மட்டும்தான் தெரியும். அங்கு இப்போது அவர் எவ்வளவு சங்கடப்படுகிறாரோ என்று மனம் சற்றே கலங்கியது.

நாட்டில் மனநோயாளர் எண்ணிக்கை அதிகரித்திருப்பதால், வடபகுதி உள்ளிட்டு நாலைந்து இடங்களில் மனநோய் ஆஸ்பத்திரிகளை அமைக்க வேண்டும். அப்படிச் செய்தால் தம்மவர்களைக் கண்டு சற்றுவது ஆறுதல் அடைந்து, விடுதலையும் பெறக்கூடுமல்லவா? மொழி தெரியாத, கண்காணாத தூர இடத்திலே இப்படிப்பட்டவர்களைக் கொண்டு அடைப்பது உயிருடன் வதைக்கும் பெரிய பாவமாவதுடன், அவர்கள் குணமடைய முடியாமல் அங்கேயே மடிந்து போக வேண்டியுமேற்பட

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "முடியுமானல் சண்டைக்கு வந்துபார்;

## இந்தியா, பிரிட்டன், ரஷ்யா சேர்ந்தாலும் நாங்களே வெற்றி பெறுவோம்"

### அமெரிக்காவுக்கு சென் யீ "ஹிட்லர்பாஷை"யில் சவால்

### ஆசியாவுக்கு அணுகுண்டு வேண்டுமாம்

பீகிங், செப். 30

**சீனவுடன் போர் தொடுத்துப் பார்க்குமாறு வெளிநாட்டு மந்திரி சென்யீ அமெரிக்காவுக்குச் சவால் விடுத்திருக்கிருர். இந்தப் பலப் பரிசோதனை சீனவுக்குத் தான் நன்மையாக முடியும் என்றும் சென்யீ கூறினுர்.**

"வேண்டுமானல் இந்தியர்களும், ரஷ்யர்களும், பிரிட்டிஷ்காரர்களும் கூட அமெரிக்காவுடன் சேர்ந்து போருக்கு வரட்டும். நிச்சயம் அவர்கள் அழிக்கப்படுவார்கள்" என்ருர் சென்யீ.

இந்தோ-பாகிஸ்தான் தகராறில், சீன பாகிஸ்தானுக்குப் பூரண ஆதரவளிக்க உறுதி பூண்டிருக்கிறது என மார்ஷல் சென்யீயும், மற்ருேர் உதவிப் பிரதமர் போயிபோவும் வலியுறுத்தினுர்கள். பீகிங்குக்கு விஜயம் செய்திருக்கும் பாகிஸ்தான் மந்திரியை வரவேற்ற போது இவ்வாறு அவர்கள் கூறினுர்கள்.

"பாகிஸ்தான் இந்தியாவினுல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறது. இந்நிலையில் சீனவின் ஆதரவு பாகிஸ்தான் பக்கம் இருப்பது இயல்பேயாகும்" என்ருர் சென்யீ.

போயிபோ பேசியபோது காஷ்மீர் மக்களின் சுயநிர்ணயத்தை சீன ஆதரிக்கிறது என்ருர்.

"பாகிஸ்தான், நியாயத்திற்காகப் போராடுகிறது. யுத்தநிறுத்தம் ஏற்பட்டபோதிலும் போராட்டம் இன்னும் முடியவில்லை. உலகம் முழுதும் இப்போராட்டத்தில் சீனவுக்கு ஆதரவாக இருக்கிறது. இறுதி வெற்றி பாகிஸ்தானுக்கே கிடைக்கும்" என்றும் சீன உதவிப் பிரதமர் கூறினுர்.

இந்தியா, பாகிஸ்தானை மீண்டும் தாக்கினுல், சீன பாகிஸ்தானுக்கு சகல வகைகளிலும் உதவியளிக்கும் என சென்யீ அதற்குமுன் கூறினுர்.

மார்ஷல் சென்யீ மேலும் பேசியபோது, ஆசிய-ஆபிரிக்க நாடுகள் தங்கள்வசம் அணுக்குண்டுகளை வைத்திருப்பதே சிறந்த கொள்கை என்ருர்.

சீனப்பகுதிக்குள் இந்தியா இன்னும் சில ராணுவ நிலைகளை வைத்திருப்பதாயும், ஆனுல் ஆசிய நாடுகளின் ஒற்றுமையைக் கருதி உடனடியாக அதன்மீது தாக்குதல் நடத்துவது சீனவின் நோக்கமல்ல என்றும் அவர் மேலும் கூறினுர்.

## 'அமெரிக்காவுடன் உறவுசீரழிகிறது இந்தியாவுடன் பெருகுகிறது'

### சோவியத் கம்யூனிஸ்ட்கட்சி முதல்வர் பிரஸ்னேவ் விளக்கம்

மாஸ்கோ, செப் 30

இந்தியாவுடன் மேலும் மேலும் உறவைஅபிவிருத்தி செய்துகொள்வதே ரஷ்யாவின் கொள்கையென சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைக் காரியதரிசி திரு. பிரஸ்னேவ், கட்சியின் மத்திய கமிட்டியில் கூறினுர்.

சீனவுடன் ஒற்றுமையுடன் வாழ ரஷ்யா செய்துவரும் முயற்சி, சீனத் தலைவர்களின் போக்கினுல் வெற்றி பெறவில்லை என்றும் ஆனுல் ரஷ்யா தொடர்ந்து இதற்காக முயற்சிசெய்யும் என்றும் மேலும் அவர் கூறினுர்.

அமெரிக்காவுடனுன உறவு மிகவும் குழப்பமான நிலையிலிருக்கிறது. வியட்னுமில் தலையீடுசெய்வதும், ஜெர்மனியை ஆயுதபாணியாக்குவதுமே இதற்குக் காரணம் என்ருர் பிரஸ்னேவ்.

பிரிட்டனுடனுன உறவும் இதேநிலையில்தான் இருக்கிறதென்றும் அவர் கூறினுர்.

வடவியட்னுமுக்கு ரஷ்யா கணிசமான அளவு ஆயுத சப்ளை செய்திருப்பதாயும் பிரஸ்னேவ் குறிப்பிட்டார்.

## பாக். ஆயுதக்கப்பல் சூயஸில் முடக்கப்பட்டது

கெய்ரோ, செப். 30

துருக்கியிலிருந்து 1100 டன் வெடிப்பொருட்களை ஏற்றிவந்த கப்பல் ஒன்றை ஐக்ய அராபியக் குடியரசு அதிகாரிகள் முடக்கியிருக்கிருர்கள்.

இதே கப்பல் இந்தியாவுக்கு வேறுபண்டங்களை ஏற்றிவந்ததாயும், ஆனுல் வழியிலுள்ள துறைமுகத்தில் அவற்றை இறக்குமாறு கேட்கப்பட்டதென்றும் அறிவிக்கப்பட்டது.

இக் கப்பலை முடக்குமாறு கெய்ரோவிலுள்ள இந்திய ஹைகமிஷன் கேட்டுக்கொண்டதற்கிணங்க, இதற்கான உத்தரவு காப்டனுக்கு பிறப்பிக்கப்பட்டது.

இதன் பின் இஸ்தான்புல்லிலிருந்து ராணுவ சாதனங்களை ஏற்றிச்செல்வதாய் காப்டன் பின்பு ஒப்புக்கொண்டார். வெடிப்பொருட்களை ஏற்றிச்செல்லும் கப்பல் சூயஸ் அதிகாரிகளுக்கு முன்னறிவித்தல்செய்யவேண்டும். ஆனுல் இப்படிச்செய்யப்படவில்லை.

கப்பலை விடுவிக்கும்படி கேட்பதற்கு பாகிஸ்தான் அதிகாரி ஒருவர் சூயஸ் சென்றிருக்கிருர். இந்த நடவடிக்கைக்காக ஐக்கிய அராபியக்குடியரசு அதிகாரிகளுக்கு முன்பாகவே, அவர் ஜனுதிபதி நாஸரைக் குறை கூறினுர்.

இக்கப்பலில் "நேட்டோ" வெடிப் பொருட்களும், கண்ணிகளும் இருந்தன என்றும், பிரிட்டன் துருக்கிக்கு அளித்த பொருட்கள் அவை என்றும் கூறப்படுகிறது.

அமெரிக்க

## சர்வாயுத பிரயோகம்

புதுடில்லி, செப். 30

லாகூர் முனையில் பாகிஸ்தானிய துருப்புகள் சகல வகையான அமெரிக்க ஆயுதங்களையும் பிரயோகித்தனர் என்றும் அவர்கள் உபயோகித்த டாங்கி எதிர்ப்பு ஏவுகருவிகள் மேற்கு ஜெர்மனியில் உற்பத்தி செய்யப் பட்டவை என்றும் அறிவிக்கப்பட்டது.

## தென்னுபிரிக்க மந்திரிக்கு எதிர்ப்பு

நியூயோர்க், செப். 30

நேற்று ஐ. நா. பொதுச் சபையில் தென்னுபிரிக்க வெளிநாட்டுமந்திரி பேச எழுந்தபோது ஆசிய, ஆபிரிக்க நாட்டுப் பிரதிநிதிகளும் மற்றும் பல பிரதிநிதிகளும் வெளிநடப்புச் செய்தார்கள்.

பிரெஞ்சு வெளிநாட்டுமந்திரி பேசுகையில் சீனவை ஐ நா.வில் சேர்க்க வேண்டும் என வற்புறுத்தினுர்.

## ஸகாரியா பிரதமர்

கெய்ரோ, செப். 30

திரு. அலிசாப்ரியின் ராஜினுமாவைத் தொடர்ந்து உதவிப்பிரதமர் திரு. ஸகாரியா முகைதீனை மந்திரிசபை அமைக்கும்படி ஜனுதிபதி நாஸர் கேட்டுக் கொண்டிருக்கிருர்.

## பாரிஸ் நகரில் ஸ்ரீமதி பண்டிட்

பாரிஸ், செப். 30

ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் நாளை பாரிசுக்கு விஜயம்செய்வார் என பிரெஞ்சு வெளிவிவகார இலாகா அறிவித்தது. பிரான்ஸில் அவர் 4 நாள் தங்குவார். பாரத-பாகிஸ்தான் பூசல்பற்றி ஸ்ரீமதி பண்டிட் பிரெஞ்சுத் தலைவர்களுடன் பேசுவார். வேறு பல நாடுகளுக்கும் அவர் செல்லவிருக்கிருர்.

பல உலக நாடுகளுக்கு இப் பிரச்னைபற்றி விளக்கிக்கூறுமுகமாக மேலும் பல பிரதிநிதிகளை இந்தியா அனுப்பவிருக்கிறது.

## இந்திய ஜனுதிபதி

பம்பாய், செப். 30

கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும், எதியோப்பியாவுக்கும் இன்று காலை புறப்பட்ட இந்திய ஜனுதிபதி ராதாகிருஷ்ணனுடன், மந்திரி ஏ. எம். தோமஸும் செல்கிருர். டாக்டர் ராதாகிருஷ்ணன் யூகோவுக்கு விஜயம் செய்வது இது இரண்டாவது தடவையாகும்.

பல்கலைக்கழக

## நிர்வாகத்தில் பெரும் மாற்றம்

பம்பலப்பிட்டி, வியாழன்

கல்விமந்திரியால் விரைவில் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் கல்வி பற்றிய வெள்ளை அறிக்கையில் பல்கலைக்கழக நிர்வாகத்தில் பெரும் மாற்றங்கள் செய்வதற்கான அம்சங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

பல்கலைக்கழகங்கள் கல்வி அமைச்சின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வருவதற்கான அம்சமும் கல்வி பற்றிய வெள்ளையறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது.

## "காஷ்மீர் ஊடுருவாளர்களை விலக்கமாட்டோம்"

### நியூயோர்க்கில் பூட்டோ

நியூயோர்க், செப். 30

காஷ்மீரில் வாக்குக்கணிப்புக்கான ஐ. நா. நிறுவனம் ஏற்படுத்தப்படுமானுல், அஸாத் காஷ்மீரிலிருந்து பாகிஸ்தான் துருப்புக்களை வாபஸ்பெறத் தயார் என வெளிநாட்டு மந்திரி திரு. பூட்டோ பொதுச்சபையில் அறிவித்தார்.

இந்நிலை ஏற்படுமானுல் இதர எல்லைகளில் தாம் பிடித்த இந்தியப் பகுதியிலிருந்தும் பாகிஸ்தான் துருப்புக்கள் வெளியேறும் என அவர் அறிவித்தார். காஷ்மீரில் வாக்கெடுப்பு நடத்தாதவரை சண்டை புதிதாக ஏற்படுவதைத் தடுக்க முடியாது என்றும் பூட்டோ கூறினுர்.

தாம் அமெரிக்க வெளிநாட்டு மந்திரி திரு. ரஸ்கைச் சந்தித்துப் பேசியது பயனுடையதாய் இருந்தது என்றும் திரு. பூட்டோ கூறினுர்.

ரஷ்ய, பிரெஞ்சு வெளிநாட்டு மந்திரிகளையும் அவர் சந்தித்தார்.

காஷ்மீரிலிருந்து ஊடுருவல்காரர்களை விலக்கிக்கொள்ளும் பிரச்னையே இல்லையென்றும், தங்களுக்கு அவர்களுடன் சம்பந்தம் எதுவுமில்லையென்றும் பூட்டோ கூறினுர்.

இதற்கிடையில் ராஜஸ்தானில் சுந்தரா பகுதியில் இந்தியா ஆரம்பித்த தாக்குதல் பலத்த சேதத்துடன் முறியடிக்கப்பட்டதென்றும், ஒரு தளபதி உட்பட 5 அதிகாரிகள் சிறைபிடிக்கப்பட்டனரென்றும் பாகிஸ்தான் ரேடியோ அறிவித்தது.

போரில் தாங்கள் பிடித்த கைதிகளின் பட்டியலைத் தருமாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இந்தியா, பாகிஸ்தான் இரு நாடுகளையும் கேட்டிருக்கிறது.

## பிரிட்டிஷ் அரசாங்கம், வானெலி, பத்திரிகை மீது சுவர்ண்சிங் தாக்கு

### உண்மையை திரிபு செய்வதாய் கண்டனம்

நியுயோர்க், செப். 30

காஷ்மீர் இந்தியாவின் பகுதி என்றும், அங்கு வாக்குக்கணிப்பு எதையும் இந்தியா எதிர்க்குமென்றும் நேற்று நியுயோர்க் வந்து சேர்ந்த இந்திய வெளிவிவகார மந்திரி திரு. சுவர்ண்சிங் நிருபர்களிடம் கூறினுர்.

"ஜம்மு காஷ்மீரில் ஐ. நா. படை அமைப்பதென்ற பேச்சுக்கிடமில்லை. அவ்வப்போது தாக்குதல் நடத்துவதை பாகிஸ்தான் கைவிட வேண்டும். காஷ்மீரைப் பாதுகாக்கும் பொறுப்பு பாரதத்தினுடையது" என்றும் அவர் கூறினுர்.

போர்நிறுத்தம் பயனுள்ளதாய் இருக்கவேண்டுமானுல் இருதரப்பும் அதை மதித்து நடக்கவேண்டும் என்ருர் சுவர்ண்சிங்.

பிரிட்டிஷ் அரசாங்கமும், பத்திரிகைகளும், பிரிட்டிஷ் வானெலியும் இந்தோ—பாக். கெடுபிடியில் உண்மையைத் திரிபுசெய்துவருகின்றன என்றும் அவர் குற்றம்சாட்டினுர்.

இதற்கிடையில் கடந்த வியாழக்கிழமை காலைபோர் நிறுத்தத்திற்குபின் பாகிஸ்தான் 42 முறை அத்துமீறி நடந்திருப்பதாய்க் கூறப்படுகிறது.

லாகூர் ஆட்சியிலிருந்து ஐ. நா. பார்வையாளர் அனுப்பிய அறிக்கை முற்றும் ஒருதலைப்பட்சமானது என டில்லியில் அதிகாரி ஒருவர் கூறினுர்.

பாரத கடற்படை தாக்குதல் நடத்தியதென்றும், இதில் இந்திய யுத்தக்கப்பல் மூழ்கடிக்கப்பட்டதென்றும், ராஜஸ்தானில் இந்தியா விமானத் தாக்குதல் நடத்தியதென்றும் பாகிஸ்தான் கூறுவது வெறும் கற்பனை என்றும் அந்த அதிகாரி கூறினுர்.

ஸியால் கோட்டிலுள்ள முஸ்லிம்கள் நன்கு கவனிக்கப்படுகிருர்கள் எனவும், காஷ்மீரில் இன்னும் 3000 ஊடுருவல்காரர்கள் இருக்கிருர்கள் என்றும் மேலும் அவர் கூறினுர்.

கிழக்குப் பாகிஸ்தானில் ஹிந்துக்களுக்கு விரோதமான பிரசாரம் இப்போது மேற்கொள்ளப்பட்டுவருவதாயும், இதனுல் பதற்ற நிலைமை ஏற்பட்டிருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது.

அதே சமயம் பாகிஸ்தானின் மேற்கு,வட மேற்குப் பகுதியில் பல இடங்களில் விடுதலைக்குப் போராடும் பக்தூன்கள் சிவில் நிர்வாகத்தை அமைத்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

## சரஸ்வதி விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

வருகிற ஞாயிற்றுக்கிழமை காலை யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில்இருக்கும் வர்த்தக கணக்கியல் கல்லூரியில் சரஸ்வதிபூசை கொண்டாடப்படவிருக்கிறது. பலவேறு கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

°°  °°  °°

மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலையில் சரஸ்வதி விழா இம்முறை சிறப்பாக நடைபெறுகின்றது. வள்ளுவர், நாவலர், பாரதி என்ற மூன்று இல்ல மாணவர்களாலும், ஆசிரியர்களாலும் தினமும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. பண்டிதர் கா. நமசிவாயத்தின் சொற்பொழிவும், தோத்திரப் பாடல்களும் தினமும் இடம்பெறுகின்றன. விஜயதசமியன்று விசேட சொற்பொழிவுகளும், ஆராதனையும் நடைபெறும்.

°°  °°  °°

அரியாலை கலைவாணி படிப்பகத்தினரால் வருகிற ஞாயிற்றுக்கிழமை இரவு சரஸ்வதி விழா கொண்டாடப்படவிருக்கிறது.

°°  °°  °°

நெல்லியடி அரசினர் மத்திய மஹாவித்தியாலம், நெல்லியடி மெதடிஸ்த மிஷன் பாடசாலை ஆகியவற்றிலும், ஐக்கிய கலாசாலையிலும் சரஸ்வதி விழா கொண்டாடப்படவிருக்கிறது.

°°  °°  °°

கொக்குவில் கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களும் சரஸ்வதி விழாவைக் கொண்டாட இருக்கிருர்கள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 2500 மாணவர் வயல்களில் களைபிடுங்குவர்

பருத்தித்துறை, வியா.

ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் வடமராட்சிப் பகுதியில் உள்ள சுமார் 2500 மாணவர்கள், வயல்களில் களைபிடுங்கும் தேசிய சேவையில் ஈடுபடுவார்கள் என வடமராட்சிக்காரியாதிகாரி திரு. ஏ. சி. விசுவநாதன் தலைமையில்புலோலி இந்து ஆங்கிலக்கல்லூரியில் நடைபெற்ற மகாநாடொன்றில் அறிவிக்கப்பட்டது.

பாடசாலை மாணவர்களை வயல்களில் களைபிடுங்கும் தேசியசேவையில் ஈடுபடுத்துவதற்கான வழிவகைகளை ஆராயுமுகமாக கூட்டப்பட்ட இம் மகாநாட்டில் பாடசாலைத் தலைவர்கள், கிராமசேவையாளர்கள், விவசாயப்பகுதி உத்தியோகத்தர்கள் முதலான பலர் கலந்துகொண்டனர்.

இப்பணியில் இப்பகுதியிலுள்ள வளர்ந்தோரை ஈடுபடுத்துவது சம்பந்தமாக காரியாதிகாரி காரியாலயத்திலும் மகாநாடு ஒன்று கூட்டப்பட்டது.

16 கிராமசேவையாளர்கள் பிரிவில் சுமார் 2000 ஏக்கர் வயல் நிலங்களில் களை பிடுங்க சுமார் 15 ஆயிரம் பேர்வரை, பெண்கள் உட்பட ஈடுபடுவார்கள் எனவும் விபரம் சேகரிக்கப்பட்டது. பாடசாலை மாணவர்களைப் பொறுத்தவரை இருபது பாடசாலைகளின் விபரங்கள் மட்டுமே இன்றுவரை கிடைத்துள்ளதாயும் மேலும் பல பாடசாலைகளின் விபரங்கள் கிடைத்ததும் பாடசாலைக்கு சமீபத்திலுள்ள வயல்களில் அவர்கள் சேவைசெய்ய ஒழுங்குசெய்யப்படும் எனவும் தெரியவருகிறது.

விக்கினேஸ்வராக் கல்லூரி உடுப்பிட்டி அ. மி. கல்லூரி ஆகியவற்றில் இருந்து தனித்தனி 400 மாணவர்கள் இப்பணியில் ஈடுபட முன்வந்துள்ளனராம்.

REGAL—JAFFNA
NOW SHOWING!
Laurence Harvey, Kim Novak
OF HUMAN BONDAGE
(W. Somerset Maugham's Novel
(Adults only)

இலங்கையில் முதன்முதலாக
யாழ். வின்ஸர் திரையில்
1 - 10 - 65
வெள்ளிக்கிழமை முதல்
பிற்பகல் 2-30 மணிக்
காட்சியுடன் ஆரம்பமாகிறது
நடிகர் திலகம்
● சிவாஜி கணேசன்,
● சரோஜாதேவி,
● சௌகார் ஜானகி
மற்றும் பலர் நடித்த
புதிய பறவை

## சகல மாணவருக்கும் சமவாய்ப்பு

பொலநறுவை, வியா.

'கொழும்புப் பாடசாலைகளிலுள்ள மாணவர்களைப் போல் கிராமப்புற மாணவர்களும் உயர் கல்விபெற வாய்ப்பளிக்கும் வகையிலேயே நவீன வசதிகளைக் கொண்ட பாடசாலை ஒன்று 3 லட்சம் ரூபா செலவில் பொலனறுவையில் 1959-ம் வருடத்தில் நான் கட்டுவித்தேன்' என காணி நீர்ப்பாசன அமைச்சர் திரு. சி. பி. டி' சில்வா பொலனறுவையிலுள்ள மத்திய மகா வித்தியாலயததில் கலாச்சார விழாவை இறுதி நாளன்று திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேற்படி பாடசாலை மாணவர்கள் தமது மூதாதையர் போன்று நாட்டின் நலன்கருதி உழைப்பார்களெனத்தாம் நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## 'ஏற்றத்தாழ்வு மறையவேண்டும்'

யாழ்ப்பாணம், வெள்ளி

சமூக ஒழிப்பு ஏற்றத்தாழ்வு ஒழிப்புவாரப் பிரசாரக்கூட்டம் காரைநகர் யாழ்.நகர்க்கல்லூரியில் அதிபர் திரு. சிவராசா தலைமையில் நடைபெற்றது.

சமூக ஏற்றத்தாழ்வு நம் சமூகத்தில் இருந்து மறைந்தால்தான் தமிழ்ச் சமுதாயம் முன்னேற்றமடைய முடியும். கல்லூரிகளில் சமூக ஏற்றத்தாழ்வு பாராது எல்லா மாணவர்களும் சமமாக நடத்தப்படுகின்றனர் என்றும் மாணவ உள்ளங்கள் எல்லோரும் ஓரினம் என்ற உண்மையை உணர்ந்து வெளி இடங்களிலும் பாகுபாடில்லாது வாழவேண்டும் என்றும் தலைவர் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

ஊர்காவற்றுறைப் பகுதிக் காரியாதிகாரி பேசும்போது எமக்குள்ளேயே நாம் ஒரு பகுதி மக்களைப் புறக்கணித்து வாழ்வதை நாமே திருத்திக்கொள்ள வேண்டும் என்ற கருத்தைத் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் தேசிய அரசாங்கத்திடம் எடுத்துக் கூறியமையால் அரசாங்கம் ஒவ்வொரு பகுதியினரையும் சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்பு பிராசாரக் கூட்டங்கள் நடாத்தும்படி பணிந்துள்ளது என்று கூறினார்.

சமூக ஏற்றத்தாழ்வு ஒழிக்கப்படவேண்டுமென வித்துவான் முருகேசன், திரு. மு. கண்மணிராசா, செல்விகபூரணம் உட்பட பலர் சொற்பொழிவாற்றினர். கிராம சேவையாளர் திரு. கனகலிங்கம் நன்றி கூறினார்.

## புதிய தமிழ் அரசாங்க ஊழியர் மகாநாடு

பம்பலப்பிட்டி, வியாழன்

இலங்கை பூராவும் உள்ள தமிழ் அரசாங்க ஊழியர்களின் (1956-ம் வருடத்துக்குப்பின் அரசாங்க சேவையில் சேர்ந்தவர்கள்) மகாநாடு ஒன்று வரும் ஞாயிற்றுக்கிழமை கொழும்பிலுள்ள அரசாங்க குமாஸ்தாக்கள் சேவைச் சங்க மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

அரசகரும மொழியை (சிங்களமொழி) கற்பதற்கு தமக்கு மேலும் வசதிகள் தரும்படி பிரதமருக்கு வேண்டுகோள் விடுப்பது பற்றி இம் மகா நாட்டில் ஆலோசிக்கப்படவிருக்கிறது.

இதுவரை நிறுத்திவைக்கப்பட்டுள்ள சம்பள உயர்வை மீண்டும் வழங்குமாறும் மகாநாட்டில் கேட்டுக்கொள்ளப்படவிருக்கிறது.

## மேலும் 200 கிராம சேவையாளர்

பம்பலப்பிட்டி, வியா.

மேலும் 200 புதிய கிராம சேவையாளர்களை அடுத்த மாதம் தொடக்கம் சேவையிலமர்த்த உள்நாட்டு அமைச்சர் தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த 200 பதவிகளுக்கும் 2000 பேர்கள் மனுச் செய்திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## "சிந்தனை" தயாராகிறது

உடுப்பிட்டி, வியாழன்

நெல்லியடி அரசினர் மத்திய மஹாவித்தியாலய விஞ்ஞானக் கழகத்தின் முதலாவது ஆண்டு விழாவை முன்னிட்டு 'சிந்தனை' என்னும் ஆண்டு மலர் தயாராகிக் கொண்டிருக்கிறது. இம்மலரின் வெளியீட்டு உயிரியல் போதனாசிரியர் திரு. குகதாசன் கவனிக்கிறார்.

நீர்வேலி

## அத்தியார் இந்துக்கல்லூரி ஸ்தாபகர் நினைவு விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி ஸ்தாபகர் நினைவுவிழா கல்லூரி அதிபர் திரு. வி. ஜி. சம்பந்தர் தலைமையில் நடைபெற்றது.

முன்னாள் அத்தியார் இந்துக்கல்லூரி அதிபர் திரு. செ. நடராசா, கல்லூரி ஸ்தாபகரான அத்தியார் அருணசலத்தின் சமாதிக்கு மலர்வளையம் சாத்தினார். இதனைத் தொடர்ந்து மாணவர்கள், ஆசிரியர்கள் சமாதிக்கு அஞ்சலிசெலுத்தினர்கள்.

"அத்தியார் அருணசலத்தின் சேவை தன்னலமற்ற பொதுச் சேவையாகும். அவர் மனதில் எத்தனையோ லட்சியங்கள் நிறைவேறுமல் புதைந்து கிடந்தன. அவைகளை அத்தியார் இந்துக்கல்லூரி மாணவர்களும், நீர்வேலி மக்களும் நிறைவேற்றிவைக்கத் தவறக்கூடாது" என்று மேற்படி விழாவுக்கு தலைமைவகித்த கல்லூரி அதிபர் திரு. சம்பந்தர் தமது பேச்சில் குறிப்பிட்டார்.

தம் ஊரிலேயுள்ள பிள்ளைகள் வேறிடங்களுக்குப் பாடசாலைகளைத் தேடிச்செல்லும் கஷ்டநிலையை இல்லாமல் செய்யவே இக்கல்லூரியை அமைத்தாரென்றும் சைவத்துக்கும், தமிழுக்கும் அவர் செய்த சேவை அளப்பரியதென்றும் கல்லூரி பிரதம பகுதித் தலைமையாசிரியர் திரு. சி. முருகேசு தமது பேச்சின்போது கூறினார்.


அத்தியார் அருணசலம் சொகுசான வாழ்க்கை வாழக்கூடிய நிலையில் செல்வச் சீமானக இருந்தும்கூட அவைகளையெல்லாம்துறந்து மாணவர்களின் கல்விவளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட பெரியாரென்று வித்துவான் அந்தோனிப்பிள்ளை பேசுகையில் சொன்னார்.

திருவாளர்கள் ஆ. இராமநாதக் குருக்கள், த. பரராஜசிங்கம் உட்பட வேறு பலரும் பேசினர்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க


அறிவித்தல்
இன்றைய இன்பமான வாழ்க்கைக்கு ஏற்ற கவர்ச்சிமிகு கைத்தறித் துணி வகைகள்.
உங்கள் விருப்பத்திற்கேற்ப தேர்ந்தெடுப்பதற்கு எண்ணற்ற வகைகள், கண்ணைக்கவரும் வண்ணங்கள், மனதைக் கவரும் புதிய டிசைன்கள், நீங்கள் நினைப்பதைவிடக் குறைந்த விலையில் பெறலாம். "ரமணி" கைத்தறி வகைகள் அழகு மிகுந்தவை. நீடித்து உழைப்பவை, கவர்ச்சிகரமான விலைகளில் கிடைப்பவை. படுக்கை விரிப்புகள், துவாய்கள், சேலைகள், வேட்டிகள், மகளிர் கைக் குட்டைகள்.
இன்னும்பல தினிசுகள்.
திங்கள், புதன், சனி ஆகிய நாட்களில் விற்பனை நடைபெறும்
மொத்த விற்பனையாளருக்கு ஏற்ப கழிவு உண்டு.
ஒருமுறை வாங்கிப் பாருங்கள், உண்மை விளங்கும்.
ரமணி நெசவுநிலையம்
(புதிய இணுவில் தெரு)
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

5-வது ஜனத்திரள் வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை) விஜிதா (ஹட்டன்)
மொடேர்ன் (பண்டாரவளை) தீவொளி (நுவரெலியா) லக்ஷ்மி (இரத்தினபுரி)
மொடேர்ன் (பதுளை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2 காட்சிகள்;
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
சிவாஜி கணேசன், சாவித்திரி
எஸ். எஸ். ராஜேந்திரன், கே. ஆர். விஜயா
நடிக்கும்



கைகொடுத்த தெய்வம்

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் பஞ்சரத
திருப்பணி நிதி



நன்கொடையை வழங்கினீர்களா வண்ணை வைத்தீஸ்வரன் பஞ்சரதத் திருப்பணிக்கு?
இன்றேல் இன்றே நன்கொடை வழங்கி ஊக்குவித்தல் அடியார் கடமையாகும்.
தனாதிகாரி,
தேர்த் திருப்பணிச்சபை,
தேவஸ்தான காரியாலயம்,
வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவகச்சேரி நகரசபை

## கேள்விப்பத்திர விளம்பரம்

1. பின்னால் விபரிக்கப்படும் வேலைகள் செய்துமுடிப்பதற்கு பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்த காரர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன.

### வேலைகள்

(அ) கண்ணுடிப்பிட்டிச் சுடலை மடம் திருத்துதல்.
(ஆ) 1-ம் வட்டாரம்: (1) கல்லடி மூட்டு ஒழுங்கை வீதி அமைத்தலும் மதகு திருத்தலும்,
(இ) 2-ம் வட்டாரம் (1) கண்டுவில் ஒழுங்கை வீதி அமைத்தல்.
(2) கென்ஸிமென் ஒழுங்கை வீதி அமைத்தல்.
(ஈ) 3-ம் 4.ம், வட்டாரங்கள்:
(1) சப்பச்சிமாவடிப் பிள்ளையார் கோவில் ஒழுங்கை வீதி அமைத்தல்.
(2) உப்புக்கேணிவீதி மிகுதிப் பாகம் திருத்தல்.
(3) மீனாட்சி அம்மன் கோவில் ரோட், திருத்துதல்.
(உ) 5-ம் வட்டாரம்: (1) அரசடி வீதி திருத்துதல்,
(ஊ) 5-ம் வட்டாரம்: (1) பிலான் வீதி திருத்துதல்,
(2) வேதவனப் பிள்ளையார் கோவில் வீதி (ரோட்) கோஸிலே அமைத்தல்.
(எ) 7-ம் வட்டாரம்: (1) நுணாவில் - கல்வயல் வீதி 1-ம் ஒழுங்கை ரோட்டுப் போடுதல்.
(2) நுணாவில் - கல்வயல் வீதி 2-ம் ஒழுங்கை ரோட்டுப் போடுதல்.
(3) கண்டி வீதியிலிருந்து வயலுக்குப் போகும் எல்லை ரோட் திருத்துதல்.
(4) 7-ம் 8-ம் வட்டார எல்லை வீதிஒருபகுதிதிருத்துதல்.

பின்வரும் வீதி ஒழுங்கைகள் திருத்துதல்

(ஏ) 8-ம் வட்டாரம்: (1) கைதடி - நுணாவில் ஊரெல்லை ஒழுங்கை,
(2) வீரபத்திரர் வீதி
(3) ஆறுமுகம் ஒழுங்கை
(4) காளியாமூலை வீதி
(5) அடைப்பு வயல் ஒழுங்கை
(6) மட்டுவில் ஊரெல்லை ஒழுங்கை.
(7) கண்டி வீதி முதலாம் ஒழுங்கை.
(8) கண்டி வீதி 2-ம்ஒழுங்கை.
(9) தாளையாடி ஒழுங்கை.
(10) மருதடிப் பிள்ளையார் கோவில் ஒழுங்கை.
(ஐ) 9-ம்வட்டாரம்: (1) லங்களா வீதிதிருத்துதல்.
(ஒ) பழைய மீன் சந்தையை இறைச்சிக்கடைகள் ஆக அமைத்தல்.

2. இந்நகரசபைக் கந்தோரில் கேள்விப்பத்திரவைப்புப் பணமாக ரூபா 25/ம் கேள்விப்பத்திரப் பணமாக ரூபா 5/ம் கட்டி எடுக்கும் கேள்விப்பந்திரத்திலேயே கேள்விகள் கேட்கப்படவேண்டும். கேள்விப் பத்திரப் பணம் ரூபா 5/- திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

கேள்விப் பத்திரங்கள் யாவும் காகிதஉறைக்குள் வைக்கப்பட்டு, உறையின் மேற்பக்கத்தில் இடதுபுறமாக அவ்வவ் வேலைக்குரிய பெயரை எழுதி தலைவர், நகர சபை, சாவகச்சேரி என விலாசமிட்டு உறைகளுக்கு மெழுகு போட்டு அடையாளம் வைத்து 1965.ம் ஆண்டு ஐப்பசி மாதம் 12-ந் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-00 மணிக்குமுன் நகரசபைக் கந்தோரிலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டிக்குள் போடப்படவேண்டும். அல்ல தபால் மூலம் பதிவு செய்து அனுப்பப்படவேண்டும்.

3. கேள்விப் பத்திரங்களில் காணப்படும் கேள்விகளில் திருத்தங்கள் ஏற்படின் அவ்வித திருத்தம் கேள்விக்காரரின் ஒப்பம் பெற்றிருக்க வேண்டும்.

4, தெரிந்தெடுக்கப்படும் கேள்விக்காரன் கேள்வித் தொகையின் பத்திலொரு பங்கை பிணையாகச்சபைத் தலைவர் அறிவிக்கும் தவணைக்குள் கட்டவேண்டும். பிணைப்பணம் கட்டிய பின்பே ஒப்பந்தம் எழுதப்படும்,

5. செய்யப்படவேண்டிய வேலைகளைப்பற்றிய முழு விபரங்களும் கேள்விகள் கேட்கமுன்பே கந்தோரில் அறிந்துகொள்ள வேண்டும். எவ்வித காரணங்கள் பற்றியும் வேலை விபரங்கள் தெரியாதென ஒப்பந்த காரர் சொல்லக்கூடாது.

6. மேலதிக வேலைகளிருப்பின் ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வி வீதங்களின்படி கணக்குமுடிக்கப்படும். கேள்விப்பத்திரத்தில் குறிப்பிடாத வேலைகள் செய்ய வேண்டியிருப்பின் சபைத் தலைவர் குறிக்கும் விதத்திற்கு செய்யப்பட வேண்டும்.

7. எந்தக் கேள்வியையும் அல்லது எல்லாக் கேள்விகளையும் தள்ளிவிட சபைக்கு அதிகாரமுண்டு.

8. ஒப்பந்தத்தின் பிரகாரம் ஒப்பந்தகாரன் குறித்த காலத்தில் வேலைசெய்து முடிக்காவிடின் சபை அவ்வேலைக்குப் பொறுப்பாயிராது. ஆனல் முக்கிய காரணம்பற்றி எழுத்துமுலம் சபைத் தலைவரிடமிருந்து தவணை பெற்றுக்கொள்ளலாம்.

9. ஒப்பந்தக்காசு வேலை திருப்திகரமாகச் செய்யப்பட்டதென்று அறிவித்த பின்புதான் கொடுக்கப்படும்.

10. ஒப்பந்தக்காசு கொடுத்து மூன்று மாதங்களுக்குப் பின்புதான் வேலையில் ஒருவித பிழையும்காணப்படாவிடின் பிணைக்காசு கொடுக்கப்படும்.

11. இவைகளைப் பற்றி இன்னும் விபரங்கள் அறியவேண்டின் சபைக் காரியாலயத்தில் காரியாலய நேரத்தில் கரியதரிசியிடம் அறிந்துகொள்ளலாம்.

இ. டா. சிவகுரு
தலைவர்
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபைக் காரியாலயம்,
சாவகச்சேரி, 28-9-65

## பிரிவிடுதல் நொத்தீஸ்

சாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டில்

நுணாவில் மேற்கு, தற்காலம் பிரதம கணக்காளர் கந்தோர், இலங்கைப் புகையிரத ஸ்தாபனம் மருதானை தம்பிராசா சுந்தரராசா.

வழக்காளி

இல. 2090/ பி

எதிராக

1. மட்டுவில் தெற்கு, தற்காலம் பொற்றனிக்கல் காடின் பேராதனை B.N. எமேசன் மனைவி அரியமலர்.
2. நுணாவில் மேற்கு தற்காலம் குருஸ்தானம் காரைநகர் G. M. கனகரத்தினம்.
3. நுணாவில் மேற்கு தம்பு அருட்பிரகாசம்.
4. மனைவி மனோரஞ்சிதமலர்.
5. நுணாவில் மேற்கு தம்பிராசா சிங்கராசா.
6. நுணாவில் மேற்கு தற்காலம் பொஸ்ஸ்ரேசன் பம்பலப்பிட்டி தம்பிராசா துரைராசா.
7. நுணாவில் மேற்கு தம்பிராசா இரத்தினராசா.
8. நுணாவில் மேற்கு தற்காலம் 17 2 ஸ்ரேசன் ரோட்டு வெள்ளவத்தை தம்பிராசா அரியகுணராசா.
9. நுணாவில் மேற்கு N. A. தம்பிராசா மகள் கனகமணி இவ பராயமற்றவவானபடியால் இவவின் தாயாரும் பராமரிப்புக்காரி 10-ம் எதிரிமூலம்,
10, நுணாவில் மேற்கு N. A. தம்பிராசா கைம்பெண் இராசம்மா.
11. நுணாவில் மேற்கு C. சின்னப்பாபிள்ளை கைம்பெண் இராசம்மா.
12. நுணாவில் மேற்கு C. சின்னப்பாபிள்ளைபெண் செல்வரஞ்சிதமணி.
13. நுணாவில் மேற்கு C. சின்னப்பாபிள்ளை.
14. மட்டுவில் தெற்கு தற்காலம் பொற்றனிக்கல் காடின் பேராதனை B.N. எமேசன்.

எதிரிகள்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று சாவகச்சேரியிறை நில. பர. ஐந்து (5) கொண்டதும், கிழக்கு தம்பையா முத்தையாவுக்கும் N. A. தம்பிராசாவின் உரிமைக்காரருக்கும் பங்காளருக்குமுரிய வாதனங்கள், வடக்கு யாழ்ப்பாணம் கண்டிரோட், மேற்கு ஒழுங்கை, தெற்கு செல்லையா சின்னப்பாபிள்ளை பெண் செல்வரஞ்சித ராணிக்குரிய வாதனம் எனத் திக்குகள் பூண்டதும் இவ் வழக்கில் அணைக்கப்பட்டிருக்கும் அதிகாரம்பெற்ற உலாந்தா A. கோவிந்தபிள்ளையால் வரையப்பட்ட 1963-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 23-ந் திகதிகொண்ட 194-ம் இலக்கப்படத்தில் 1-ம், 2-ம், 3-ம் துண்டுகளாகச் சுட்டிக் காட்டப்பட்டிருப்பதுமான மொட்டைப் புளியடி வளவு அல்லது புளியடிவளவு என்னும் ஆதனத்தையும் அதற்குள்ளிருக்கும் கட்டிடத்தையும் அதைச்சேர்ந்தவைகளனைத்தையும் 1951-ம்ஆண்டின் 16-ம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச் சட்டத்திற்கமைய மேற்படி கோட்டில் மேற்படி இலக்கத்தில் ஓர் பிரிவிடுதல் வழக்குத் தொடர்ந்திருக்கப்பட் டிருக்கிறது. மேற்படி ஆதனத்தில் உரிமை கோருபவர்கள் 1965-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 22-ந் திகதி காலை 9 மணிக்கு மேற்படி கோட்டில் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கோட்டாரின் கட்டளைப்படி 1965ஹு புரட்டாதிமீ 28உ

சக்கிடுத்தாருக்காக

889

## வரி விளம்பரம்

### தேவை

வயது 25, ஆங்கில விஞ்ஞான எஸ். எஸ் ஸி. சித்தி. லிகிதர், கணக்கப்பிள்ளை அல்லது வேறுஏதாவது தொழில் ஏதேனுமொரு ஸ்தாபனத்தில்வேலை பார்க்க விரும்புகிறூர். கொடுக்கக்கூடிய சம்பளம், மற்றும் விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 1093, ஈழநாடு மேற்பார்த்து, யாழ்ப்பாணம். 1093

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைக்குரிய தர்ம நிலங்களையும், கோயில்களையும் மேற்பார்வை செய்வதற்கு ஒரு காரியஸ்தர் தேவை. விண்ணப்பிப்பவர் தமிழ் அறிவும், ஆங்கிலஅறிவும் உள்ளவராய் சைக்கிள் ஓடத்தெரிந்தவராய் சபைக்குரிய நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் வசிக்கச் சம்மதமுள்ளவர்களாய் இருக்க வேண்டும். தகுதிக்குரிய சம்பளம் வழங்கப்படும். இரண்டு நற்சாட்சிப் பத்திரங்களோடு, 22-10-65 க்குள் விண்ணப்பிக்குக. காரியதரிசி, சைவபரிபாலனசபை, யாழ்ப்பாணம். 1091

ஆங்கில அறிவுள்ள பிணைப்பணம் கட்டக்கூடிய கெசியர் ஒருவர் உடனே தேவை. மாதாந்தச் சம்பளம் ரூபா 200/- வழங்கப்படும். றூபா இன்டஸ்றீயல்வேக்ஸ் C/o கொலம்பியா ஸ்ரூடியோ, வவனியா. 1081

எமது தயாரிப்புகளை வீட்டுக்கு வீடு விற்பனை செய்வதற்கு பெண்கள் தேவை. அனுபவமற்றவர்களுக்கு பயிற்சியளிக்கப்படும். விண்ணப்பிக்கவும்: மனேஜர், இலங்கா லபோற்றறீஸ், 46, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 1096

புதிதாய் திறக்கப்படும் கிறீன்பலெஸ் கோட்டலுக்கு சமையல்காரர், ரிமாறுவோர் தேவை. புதன் கிழமைக்கு முன் நேரில் வரவும். வ. ச. சுப்பிரமணியம், 66, கண்டி ரோட், வவனியா. 1097

### கல்வி

சிறந்த பட்டதாரி ஆசிரியரால் பொது தராதர வகுப்பு மார்கழிசோதனைக்கு விஞ்ஞானப் பாடங்கள் போதிக்கப் படுகின்றன. இடத்துக்கு முந்துங்கள்.

வர்த்தக கணக்கியல் கல்லூரி, (அந்தியகால சகாய நிதிச்சங்க முதல் மாடி, சீதா சோடா பக்டரி முன்னால்) 330, காங்கேசன்துறை வீதி. யாழ்ப்பாணம். 1094

ஜி. ஸி. ஈ. சாதாரணம் கலை/ விஞ்ஞானம்/ வர்த்தக வகுப்புகளில் சில இடங்களே காலியாக உள்ளது. தாமதிக்காமல் சேருங்கள். யுனைட்டெட் இன்ஸ்ரிரியூற்ஸ், நெல்லியடி, கரவெட்டி/ 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 1084

கலை, விஞ்ஞானம், வர்த்தக பாடங்களுக்கு ஒரு வருடத்திற்கு ஒரு பாடத்திற்கு இருவருக்கு இலவசப்பயிற்சி அளிப்பதற்கு மனுக்கோரப்படுகிறது. மாணவமாணவிகள் ஒரு பாடத்திற்கு மேற்பட்ட பாடங்களுக்கு மனுச் செய்யலாம். ஆனல் ஒரு பாடத்திற்கு ஒரு ரூபா வீதம் பிரவேசக்கட்டணம் செலுத்தவேண்டும். விண்ணப்ப முடிவு: 25-10-65. விபரங்கள் அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். வர்த்தகக்கல்லூரி, ஸ்தாபிதம் 1924, பருத்தித்துறை. 1095

### பிரபல சோதிடம்

சாதகப்பலன் ரூபா 3-00, ரேகைபலன் ரூபா 2-00, ஆரூடபலன் ரூபா 1-00, எஸ். சிவகுருநாதன், 160, அரசடி ரோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். 1092

### ஸ்ரீ கற்பகவிநாயகர் ஆலய மண்டலாபிஷேகம்

யாழ்ப்பாணம், வெள்ளி வண்ணார்பண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் ஆலய 22-ம் நாள் மண்டலாபிஷேகம் இன்று மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும். இரவு 9 மணிக்கு சுவாமி உள் வீதிவலம் வடுவார். திரு. வீ. சந்தானத்தின் சங்கீதக்கச்சேரியும், கண்ணன் குழுவினரின் சங்கீதக் கச்சேரியும் இரவு நடைபெறும்.

### சிறுமி மரணம்

பதுளை, வியாழன்

பதுளையிலுள்ள ஹெலகமவைச் சேர்ந்த சுனந்தா பியசேலி என்ற 7 வயதுச் சிறுமி மின்னலால் தாக்குண்டு ஸ்தலத்திலேயே மரணமானார்.

### நகரசபை வவுனியா

இம்மதி 10-ந் திகதியில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் தொடர்பாக பொதுச்சந்தை நிர்மாணிப்பதற்குரிய கேள்விப்பத்திரங்கள் ஒக்டோபர் மாதம் 8-ந் திகதி நண்பகல் 12-00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

1965-ம் ஆண்டு ஒக்டோபர் 15-ந் திகதி நண்பகல் 12-00 மணிவரை கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

ம. பொன்னையா,
தலைவர் நகரசபை,
வவுனியா.

நகராண்மைக்கழகம்,
வவுனியா, 27-9-65. 891




### கொழும்பு

வெள்ளி 1 - 10 - 65

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00).

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தோத்திரப்பாடல்கள், 8-00 தேர்ந்தஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-15 நாதஸ்வரம்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 ஞானாஞ்சலி, 7-45 பாட்டு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 விமர்சனம், 9-30 நேயர்விருப்பம், 10-00 புல்லாங்குழலிசையும் கிளாரினெட்டும், 10-15 தேர்ந்தஇசை.

### வேலையற்றோர் தொகை அதிகரிப்பு

பம்பலப்பிட்டி, வியா.

இவ்வருடம் ஜூலை மாதம் வரை சுமார் 187,487 பேர் தங்கள்பெயர்களை தொழில் பதிவு கந்தோரில் பதிவு செய்துள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# வடமாகாண பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

''வடபகுதியில் விளையாட்டின் தரம் உயரக்கூடிய விதத்தில் பாடசாலை அதிபர்கள், விளையாட்டுத் துறையில் நன்கு கவனம் செலுத்த வேண்டும். அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பாடசாலைகளுக்கிடையேயான வலை, கைப்பந்தாட்டப் போட்டிகளில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் எதுவுமே வெற்றி பெருதது மிகவும் கவலைக்குரியதொன்று. இனியாவது நமது பாடசாலைகள் விளையாட்டுத் துறைக்கும் முக்கிய இடம் கொடுக்க முயற்சிக்க வேண்டும்''

யாழ்ப்பாணம் ஸ்ரேடியம் விளையாட்டரங்கில் நேற்றைய தினம் நடைபெற்ற வடபகுதி பாடசாலைகளுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகளுக்குப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடபகுதி உதவி வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். திருமதி தணிகாசலம் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கினர்.

போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களின் விபரங்கள் வருமாறு:

## 200 யார் ஓட்டம்

கீழ்பிரிவு: திஸவீரசிங்கி (சென். பற்றிக்ஸ்), கணபதி (யாழ். இந்து), சிவனருள் சுந்தரம் (யாழ். சென்றல்)

மேற்பிரிவு: சற்குணசீலன் (நெல்லியடி சென்றல்), நிமலானந்தா (ஸ்கந்தா), மகேந்திரன் (யாழ். சென்றல்)

## தடி ஊண்டிப் பாய்தல்

மேற்பிரிவு: சூரியகுமார் (சென். ஜோன்ஸ்), கமலேஸ்வரன் (ஹாட்லி), ராஜரூபிந்திரா (மானிப்பாய் இந்து)

## ஈட்டி எறிதல்

மேற்பிரிவு: கிறவுதர் (சென். பற்றிக்ஸ்), செல்வராஜா (ஹாட்லி), ஜெகதீசன் (மானிப்பாய் இந்து)

கீழ்பிரிவு: சிவகுமரன் (யாழ். சென்ரல்), ஸ்ரீஸ்கந்தராஜா (மகாஜன), குணநாயகம் (ஹாட்லி)

## குண்டெறிதல்

கீழ்ப்பிரிவு: திஸவீரசிங்கி (சென். பற்றிக்ஸ்), சண்முகம் (யாழ். சென்ரல்), ஜேசுதாசன் (யாழ். சென்ரல்)

மேற்பிரிவு: கிறவுதர் (சென். பற்றிக்ஸ்), புவிராஜசிங்கி (சென். பற்றிக்ஸ்), குமரன் (யாழ். சென்ரல்)

## உயரம்பாய்தல்

கீழ்ப்பிரிவு: பிரேமச்சந்திரன்(ஸ்கந்தா), குணநாயகம் (ஹாட்லி), சிவநேசன்(மகாஜன)

மேற்பிரிவு; ராஜரத்தினம்(சென். ஜோன்ஸ்), பாலதேவன் (எஸ்.எஸ்.சி.) அருளானந்தம் (சென். பற்றிஸ்)

## 400 யார் ஓட்டம்

மேற்பிரிவு: தர்மராஜா (சென். ஜோன்ஸ்), சந்திரசேகரம்(ஹாட்லி), ஞானச்சந்திரன் (யாழ். கல்லூரி)

## பரிதி வட்டம் வீசல்

கீழ்ப்பிரிவு: குணநாயகம் (ஹாட்லி), ஸ்ரீஸ்கந்தராஜா (மகாஜன), சிவகுமாரன் (யாழ். கல்லூரி)

மேற்பிரிவு: கிறவுகர் (சென். பற்றிக்ஸ்), சிவயோகேஸ்வரன்(சென். ஜோன்ஸ்) குமாரன் (யாழ். சென்ரல்).

## 100 யார் ஓட்டம்

கீழ்ப்பிரிவு: திசவீரசிங்கி (சென். பற்றிக்ஸ்), கணபதி (யாழ். இந்து), திருஞானசம்பந்தமூர்த்தி (யாழ். இந்து).

மேற்பிரிவு: சற்குணசீலன் (நெல்லியடி சென்ரல்), விபுலானந்தன் (சென். ஜோன்ஸ்), மகேந்திரன் (யாழ். கல்லூரி).

அதி கீழ்ப்பிரிவு: சரத் சந்திரா (ஹாட்லி), இராஜசிங்கம் (யாழ். சென்ரல்), கிருஷ்ணபவன் (ஹாட்லி).

---

கெய்ரோ, செப். 30

சூயஸில் முடக்கப்பட்டிருக்கும் பாகிஸ்தான் கப்பலிலிருந்து இந்தியாவுக்கான 500 டன் சரக்கை இறக்கும்படி ஐக்கிய அராபியக் குடியரசின் நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது.

இந்தச் சரக்கு பாகிஸ்தானுக்கு சென்ருல் அங்கு பறிமுதல்செய்யப்படுமென்றும், எனவே அதைத்தம்வசம் ஒப்படைக்கக்கவேண்டும் என்றும் இந்திய ஹைகமிஷன் கோரியிருந்தது. இச்சரக்குகள் பம்பாய் இறக்கப்படவிருந்தன.

பாகிஸ்தான் தூதராலயம் நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்திருக்கிறது.

# தடுத்து நிறுத்தப்பட்ட கப்பல்

கெய்ரோ, செப். 29

துருக்கியிலிருந்து ராணுவ தளபாடங்களை எற்றி வந்த கப்பலொன்று சுயஸ் கால்வாயில் தடுத்து நிறுத்தப்பட்டது.

கப்பலின் காப்டன் முறையான உத்தரவு பெருது சென்றதாலேயே இவ்விதம் இக் கப்பல் ஐக்கிய அராபியக் குடியரசு அரசாங்கம் தடுத்து நிறுத்தியது என அறிவிக்கப்பட்டுள்ளது.

---

# செனட்சபையில்

## அமைச்சர் தந்த விளக்கம்

பம்பலப்பிட்டி, புதன்

செனட் சபையில் மந்திரி திரு. எம், திருச்செல்வம் பேசுகையின், தமிழரசுக்கட்சி ஏன் ஐக்கிய தேசியக்கட்சியுடன் சேர்ந்தது என்பதற்கு விளக்கம் கூறினர்.

''எமது கட்சி சுதந்திரக் கட்சியை ஆதரித்தபொழுது நாங்கள் எதிர்பார்த்தபெறு பேற்றை நாங்கள் இன்று ஐக்கிய தேசியக் கட்சியிடமிருந்து எதிர்பார்க்கவில்லை. நாங்கள் முன்னுள் அரசாங்கத்தை ஆதரித்து ஏமாந்தவர்கள் என்ற காரணத்தினுலும், விரக்தி அடைந்த காரணத்தினுலும் இப்படிச் செய்தோம்'' என்றுஅமைச்சர் குறிப்பிட்டார்.

'முன்னுள் அரசாங்கத்தின் தேசிய மயமாக்கும் கொள்கைகளை தமிழ்பேசும் மக்கள் விரும்பவில்லை. தமிழரசுக்கட்சிக்கு ஆதரவு கொடுத்த பாமர மக்கள் தனியார்துறை இருக்க வேண்டுமென்ற எண்ணங் கொண்டவர்களாகவே இருந்தனர்' என்றும் அவர் தெரிவித்தார்.

# மலாய்,சீனமொழிகளில் திருக்குறள்

கோலாலம்பூர், செப். 29

திருக்குறளை மலாய், சீன மொழிகளில் மொழிபெயர்க்க மலேசிய பல்கலைக் கழகம் முயற்சி மேற்கொண்டுள்ளது. தமிழர்களின் உயர்ந்த வாழ்க்கை நெறிகள் திருக்குறளில் காணப்படுவதாகவும் கருத்து வெளியிடப் பட்டுள்ளது.

# பழைய மாணவர் வெற்றி

யாழ்ப்பாணம், புதன்

யாழ். மத்திய கல்லூரி மாணவர்க்கும் அக் கல்லூரி பழைய மாணவர்க்குமிடையில் நடைபெற்ற வருடாந்த உதைபந்தாட்டப் போட்டியில் பழைய மாணர்வர் 1—0 கோலால் வெற்றி பெற்றனர். இப்போட்டிக்கு திரு. கிருபாகரன் மத்தியஸ்தம் வகித்தார்.

---

# பீகிங்கில் பாகிஸ்தான் கோஷ்டிகள்

பீகிங், செப். 29

மக்கள் சீனத்தின் வருடாந்த தேசிய தின நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் பொருட்டு பாகிஸ்தான் வர்த்தக மந்திரி தலைமையிலான கோஷ்டியொன்று இன்று இங்குவந்து சேர்ந்தது.

சீன சிவில் விமான சேவையைச் சேர்ந்த அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவென பாகிஸ்தான் சிவில் விமானச் சேவையைச் சேர்ந்த 3 பேர் கொண்ட ஒரு கோஷ்டி ஒன்றும் இங்கு வந்து சேர்ந்துள்ளது.

# ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

லாம். நமது எம். பி. மார்கள் இதுபற்றி சற்றே கருணையுடன் கவனம் செலுத்துவார்களா?

ஃ ஃ ஃ

சீமையிலுள்ள ஆக்ஸ்போர்டு சர்வகலா சாலையிலே விநாயகப் பெருமான் கோவில் கொள்ளப் போகிருராம்! திருக்கேதீச்சரம் வந்துள்ள தமிழ்நாட்டு ஸ்தபதிமார்கள் அழகான பிள்ளையாரைக் கல்லில் செதுக்கி வைத்துள்ளதாகவும், சீமைக்கு சீக்கிரத்தில் இவ்விக்கிரகத்தை அனுப்பி வைக்கப் போவதாகவும் அறிந்தேன்.

இதற்கு யார் 'ஆர்டர்' கொடுத்திருக்கிருர் தெரியுமா? முன்னுள் பிரதமர் ஸ்ரீமாவின் புதல்வி சுனிதா தானென்றும், ஆக்ஸ்போர்டிலே இந்திய கலாசாரப் பகுதியில் விநாயகர் விக்கிரகத்தை பிரதிஷ்டை செய்ய அவரே ஏற்பாடு செய்ததாகவும் பிள்ளையார்மீது அவருக்குப் பக்தியுண்டென்றும் தெரிகிறது. நம்ப முடிகிறதா? ஈழத்தைச் சேர்ந்த ஒரு சிங்கள பௌத்த பெண்மணிக்கு இந்தப்பாக்கியம் கிடைத்தது வியப்பல்லவா?

ஃ ஃ ஃ

நீற்றவன்காண் நீராகித் தீயானுன்காண் நிறைமழுவுந்தமருகமும் எரியுங்கையில், தோற்றவன் காண் தோற்றக் கேடில்லாதான் காண் துணையிலிகாண் துணையென்று தொழுவாருள்ளம், போற்றவன்காண் புகழ்கள் தமைப் படைத்தான் தான் காண் பொறியரவும் விரிசடைமேற் புனலுங்கங்கை, ஏற்றவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி ஏகம்பன் காண் அவனென் எண்ணத்தானே.

— அப்பர்சுவாமிகள்

# 'பகமை கல்வியைப் பாதிக்கிறது' —மந்திரி

காலி, வியாழன்

'ஆசிரியர்களிடையே ஐக்கியமும் சமரசமும் இல்லாத காரணத்தினுல் கல்வி பெரிதும் பாதிக்கப்படுகிறது' என போக்குவரத்து மந்திரி திரு. ஈ. எல். பி. குருள்ளை இங்குள்ள மகிந்தாக் கல்லூரி பரிசளிப்பு விழாவில் உரை நிகழ்த்துகையில் கூறினுர்.

ஆசிரியர்களிடையே ஐக்கியமும் பரஸ்பர நல்லெண்ணமும் இருப்பதும் மாணவர்களிடையே ஒழுக்கக்கட்டுப்பாடு நிலவுவதும் கல்வியின் தரத்தைப் பேணிக் காப்பாற்றுவதற்கு மிக அவசியமென அவர் மேலும் பேசுகையில் தெரிவித்தார்.

# ஹாட்லிக்கல்லூரி

## பிரவேசம் : 1966

1. மத்திய பாடசாலை, சாதாரண க. பொ. த. ப; உயர்தர க. பொ. த. ப. கலை விஞ்ஞான ஆரம்ப வகுப்புகளில் இடமுண்டு. கல்லூரி அலுவலகத்தில் பெறக்கூடிய பத்திரங்களில் விண்ணப்பஞ் செய்வோர் ஒவ்வொரு வகுப்பிற்கும் எதிரே தரப்பட்டிருக்கும் திகதிகளுக்குப் பின் பிறந்தவராய் இருத்தல்வேண்டும்.

2. வகுப்பு 6 (70 இடங்கள்—31-12-54) விண்ணப்பங்களின் முடிவுத்திகதி 9-10-65. பிரவேசப் பரீட்சைந் திகதி கல்விக்கந்தோரால் பின்னர் அறிவிக்கப்படும்.

3. வகுப்பு 7: (31-12-53)

4. வகுப்பு 8: (31-12-52)

5. சாதாரண க. பொ.- த. ப. ஆரம்ப வகுப்பு: (31-12-51). இவ் வகுப்புக்களில் மிகச் சில இடங்களே உண்டு. விண்ணப்பங்களின் முடிவுத் திகதி 20-10-65. பரீட்சைத்திகதி 6-11-65.

6. உயர்தர க. பொ. த. ப. ஆரம்ப வகுப்பு (31-12-47) விஞ்ஞான வகுப்புக்களில் ஆங்கில மூலத்திற்கே இடமுண்டு. விண்ணப்பங்களின் முடிவுத் திகதி 27-10-65. பரீட்சைத் திகதி 13-11-65.

க. பூரணம்பிள்ளை
அதிபர்

பருத்தித்துறை,
28-8-1965. 890

# கலைமகள் விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி இந்து இளைஞர் மன்றத்தினர் கல்லூரித் திறந்த வெளி அரங்கில் இன்றுமாலை 6 மணிக்கு சரஸ்வதி பூஜையைக் கொண்டாட ஏற்பாடுகள் செய்துள்ளனர். பூசை, ஆரதனை, கல்லூரி மாணவர்களின் தோத்திரப் பாடல்கள் ஆகியவையும் இசைவிருந்து, கதாப்பிரசங்கம் ஆகிய நிகழ்ச்சிகளும் நடைபெறவிருக்கின்றன.

---

# யூகோ. செல்லும் ஜனதிபதி

புதுடில்லி, செப். 29

ஜனதிபதி ராதாகிருஷ்ணன் நாளை யுகோசிலாவியாவுக்கு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொள்ளுகிருர். பம்பாயிலிருந்து நாளை காலை விமான மூலம் பெல்கிரேட்டுக்கு திரு. ராதாகிருஷ்ணன் பயணமாகிருர். இவர் செக்கோசிலாவாசியா, ருமேனியோ, எதியோப்பியா ஆகியஇடங்களுக்கும் விஜயம் செய்வார்.

## வில்லூன்றி மயானத்தில்

# புதைக்கப்பட்ட சடலம் தோண்டி எடுக்கப்பட்டது

யாழ்ப்பாணம், வியா.

அடையாளம் தெரியாத சடலம் என்ற காரணத்தால் சென்ற திங்கட்கிழமை மாலை புதைக்கப்பட்ட வயோதிபர் ஒருவரின் சடலத்தை அவரது மகனின் வேண்டுகோளின் பெரில் மூன்று நாட்களின் பின்னர் நேற்றுமாலை 6 மணிக்கு தோண்டி எடுத்த சம்பவம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

வில்லூண்றி மயானத்தில் புதைக்கப்பட்ட தந்தையாகிய சின்னையாவின் சடலத்தை, சமய முறைப்படி தகனம் செய்வதற்கு தம்மிடம் ஒப்படைக்கும்படி அல்வாய் தெற்கை சேர்ந்த சின்னையா கிருஷ்ணபிள்ளை நேற்றுக்காலை, யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட்டிடம் விண்ணப்பித்தார்.

மகன் சார்பில் ஆஜரான புறக்டர் ஏ. அமிர்தலிங்கம் மாஜிஸ்திரேட் திரு. ரீ. ஜே. ராஜரத்தினத்திடம் விண்ணப்பத்தை சமர்ப்பித்தார்.

விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்ட மாஜிஸ்திரேட், மாநகரசபையிடம் உத்தரவு பெற்று, சடலத்தைத் தோண்டி எடுத்து, அடையாளம் காட்டியபின், விண்ணப்பக் காரரான மகனிடம் ஒப்படைக்கும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆனைப்பந்தி சந்தியில் நடைபெற்ற லொறி விபத்தில் இறந்தவரின் சடலம் இனந் தெரியாத காரணத்தால் புதைக்கப்பட்டது.

Estd: 1929 S. R. S. போன்: 296

ஜவுளி மாளிகை

தீபாவளி பண்டிகைக்காக
எல்லாவிதமான
ஜவுளித் தினிசுகளும்
ஏராளமாக வரவழைத்திருக்கிறோம்
உங்கள் தேவைகளுக்கு
முன்கூட்டியே தெரிவு செய்யுங்கள்!

எமது சொந்த தறிகளில் தயார் செய்த
கைத்தறி சேலைகளும்,
பரமாஸ் வேட்டி சால்வைகளும்
விற்பனைக்குத் தயாராக இருக்கிறது.

எஸ். ஆர். செல்லத்துரை

216, கே. கே. எஸ். ரோட், — யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org